# தமிழ் முரசு

තමිල් මුරසු

Thamil Murasu

நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்

மலர் : 1 இதழ் : 83 - 05.03.2023




## யாழில் இடம்பெற்ற மஹாகவியின் 'புதியதொரு வீடு' நாடகம்

## இஸ்லாமியத் தமிழ் இலக்கிய முயற்சிகளில் இயங்கும் பௌஸ்

## நிறவெறியை எதிர்த்து போராடிய கரீபிய கலைஞன் பொப் மார்லி

## ஈழத்துத் தமிழர்தம் கலை மரபுகளின் முதுசம் பரசுராமன்

தமிழ் முரசு
තමිල් මුරසු
Thamil Murasu
நிகரொன்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்
மின்னஞ்சல்: thamilanmurasu@gmail.com
தொலைபேசி: 0115 200 900/011 588 6187
விளம்பரம் : 0771721880

# நவீன நாடக அரங்கு

நவீன நாடகத்தைத் தமிழில் அறிமுகம் செய்கிற பணி எழுபதுகளின் இறுதியிலும் எண்பதுகளின் தொடக்கத்திலும் மிகவும் தீவிரமடைந்தது. மேலைநாட்டு அறிஞர்களின் நாடகக்கோட்பாடுகள் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டன. தமிழ் மண்ணுக்கேயுரிய நிகழ்கலைக் கூறுகள் சிறப்பித்துப் பேசப்பட்டன.

இருபதாம் நூற்றாண்டில் உருவாக்கம் பெற்ற இரண்டு விதமான மேடை நாடக ஆக்கங்களில் பம்மல் சம்பந்த முதலியார், பரிதிமாற்கலைஞர் போன்றோர் மேற்கத்திய நாடகப் பாணியைப் பின்பற்றிப் புதிய அரங்கை உருவாக்கினர்.

முன்னர் நாடகக்கதையை அடியொற்றி இது சமூகவியல் நாடகம், இது வரலாற்று நாடகம், இது புராண நாடகம் எனப் பிரித்து வகைப்படுத்தியிருந்ததை அறிவோம்.

ஆனால், இக்காலத்தில் காவிய அரங்கு (Epic Theatre), எளிய அரங்கு (Poor Theatre), தலித் அரங்கு, பெண்ணிய அரங்கு (Feminist Theatre) என கோட்பாட்டு வழியில் நாடக அரங்குகள் அறியப்படுகின்றன. இங்கு கதை மட்டும் முக்கியமல்ல. கட்டமைக்கப்படுகிற நாடக வடிவமே குறிப்பிட்ட அரங்கைத் தீர்மானிப்பதாகவும் ஒன்று பிறிதொரு அரங்கிலிருந்து வேறுபட்டதென இனங்காட்டுவதாகவும் அமைகிறது.

எழுபதுகளின் இறுதியில் எழுத்திலும் நிகழ்விலும் புதுமை தாங்கிய நாடகங்கள் தமிழில் அறிமுகமாயின. இவை நவீன தமிழ் நாடகங்கள் என அழைக்கப்பெற்றன. ஆரம்ப காலத்தில் இந்நாடகக் குழுக்கள் சமூக நடைமுறைப் பிரச்சினைகளைப் புதிய வடிவத்தில் எளிமையாக, மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய வகையில், திறந்தவெளியில் சிறு சிறு நாடகங்களாக நிகழ்த்திக் காட்டின.

நாட்டுப்புற நிகழ்கலை வடிவங்களை நவீன நாடகத்தில் எடுத்தாளும்போது அவை குறித்து அறியப்படாத பல செய்திகள் தெரியவந்தன. எனவே, இவை குறித்த ஆராய்ச்சியும் நாடகத் தயாரிப்பினூடாக நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. படித்தவர்களின் எழுத்துகளால் பாமரக் கலைஞர்களும் கற்றோர்களால் வியந்து நோக்கப்பட்டனர். இக்கலைஞர்களுக்கு நாடக அறிஞர்கள் உதவுவதும் நாடக அறிஞர்களுக்கு நாட்டுப்புறக் கலைஞர்கள் உதவுவதுமாக ஒரு பரஸ்பர உறவு உருவானது.

நாடக விழாக்களுக்காகவும் நாடகப் பட்டறைகளுக்காகவும் பல நவீன நாடகங்கள் தயாரிக்கப்பட்டன. நவீன நாடகங்களில் விளங்கிக் கொள்ள முடியாத அளவிற்குக் குறியீட்டுச் சொற்கள் இடம்பெறுகின்றன. பேச்சு முறையில் நடிப்பில் கடினத்தன்மை உள்ளது. சமூக நடைமுறை இயல்பிலிருந்து விலகிய கதையும் கதைப்பாத்திரங்களும் எடுத்தாளப்படுகின்றன. பார்வையாளர்களுக்குக் கிஞ்சித்தும் அறிமுகமில்லாத ஒப்பனை, ஆடை, இசை, ஒளியமைப்பு ஆகியவற்றில் புதிய வெளிப்பாட்டு உத்திகள் புகுத்தப்படுகின்றன. மொழிபெயர்ப்புக் கதைகளும் கற்றோர் மட்டுமே புரிந்துகொள்ளக்கூடிய உளவியல் தொடர்பான கதைகளும் இவற்றில் மிதந்திருக்கின்றன. மொத்தத்தில் இது நவீன உத்திகள் பொதிந்ததும் இருண்மை நிரம்பப்பெற்றதுமான அரங்காக மாறி இருக்கிறது.

# தெளிவத்தை ஜோசப் கலாநிதி பட்டத்துக்குத் தகுதியானவர்

## நினைவேந்தல் நிகழ்வில் திலகர்



''புனைவு இலக்கியத்தில் புகழ்பெற்ற தெளிவத்தை ஜோசப் ஆய்வு இலக்கியத்துக்கு ஆற்றிய பங்களிப்பு மகத்தானது. 'மலையக சிறுகதை வரலாறு' நூலை எழுதியதன் மூலம் அவர் கலாநிதிப் பட்ட ஆய்வுக்கு நிகரான ஓர் ஆய்வை முன்வைத்துள்ளார். ஈழத்து சிறுகதை மூலவர்கள் மூவரல்ல, நால்வர் என்பது அவரது ஆய்வின் நிறுவல். ஆனாலும், அவரது ஆய்வு முயற்சிகளுக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை. டொமினிக் ஜீவாவுக்கு யாழ். பல்கலைக்கழகம் முதுமாணிப் பட்டம் கொடுக்கத் தயாராகி ஜீவா அதனை மறுத்தார். ஆனால், தெளிவத்தை ஜோசப்புக்கு அத்தகைய ஒரு பட்டத்தை வழங்க யாருமே சிந்திக்காதது அபத்தமானது. ஆய்வு வரைமுறைகளுக்கு அப்பால் அந்த ஆய்வுநூல் கலாநிதிப் பட்ட ஆய்வுக்கு நிகரானது'' என எழுத்தாளரும் பதிப்பாளருமான மல்லியப்புசந்தி திலகர் தெரிவித்துள்ளார்.

துரைவி நினைவாக 'துரைவி விருது வழங்கலும் நினைவுப்பேருரையும்' நிகழ்வில் இடம்பெற்ற, துரைவி ஞாபகார்த்தக்குழுவின் தலைவராக இருந்த அமரர் தெளிவத்தை ஜோசப் நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றும்போதே திலகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.







துரைவி பதிப்பக நிறுவுனர் துரை விஸ்வநாதனின் 93ஆவது பிறந்த தின நினைவாக 2022ஆம் ஆண்டு வெளிவந்த ஆய்வு மற்றும் மொழிபெயர்ப்புப் படைப்புகளுக்கான விருதும் சிறந்த பெண் ஆளுமைக்கான ஜெயம் துரைவி விருது வழங்கும் நிகழ்வும் துரைவி நினைவுப்பேருரையும் தெளிவத்தை ஜோசப் நினைவேந்தலும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி சனிக்கிழமை மாலை இடம்பெற்றது. ஓய்வுபெற்ற அரச அதிகாரியும் எழுத்தாளருமான எம்.வாமதேவன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வு அதிதிகளின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமானது. அமரர் துரைவி, திருமதி ஜெயம் துரைவி ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு அவர்களது மகன் ராஜ் பிரசாத்தும் தெளிவத்தை ஜோசப்பின் திருவுருவப் படத்துக்கு அவரது மகன்மார் ரமேஷ் மற்றும் கண்ணா ஆகிய இருவரும் மலர்மாலை அணிவித்து மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

மேமன் கவி வரவேற்புரையை வழங்க எம்.வாமதேவன் தலைமையுரையாற்றினார். ''வியாபாரத்துறையில் இருந்து கொண்டு மிகக் குறுகிய காலத்தில் மலையகம் சார்ந்த 10 முக்கியமான படைப்புகளைத் தந்து வரலாற்றில் இடம்பிடித்தவராக துரைவி திகழ்கிறார். அவரது மறைவின் பின்னர் அவரது புதல்வர் ராஜ் பிரசாத், துரைவி மற்றும் அவரது தாயார் ஜெயம் ஆகியோரை நினைவுகூர்ந்து இந்த நினைவந்தல் நிகழ்வை நடத்தி வருகின்றமை வரவேற்கத்தக்கது. புனைவு இலக்கியங்களுக்கு பல விருதுகள் வழங்கப்பட்டு வரும் நிலையில், ஆய்வு மற்றும் மொழிபெயர்ப்புப் படைப்புகளுக்கு வருடாந்தம் விருது வழங்கி வருவதுடன், தனது தாயாரின் நினைவாக வருடாந்தம் பெண் ஆளுமை விருது ஒன்றையும் இந்த ஆண்டு முதல் அறிமுகம் செய்வதும் சிறப்பு'' என்றார்.

துரைவி ஞாபகார்த்தக்குழுவின் தலைவராக இருந்த அமரர் தெளிவத்தை ஜோசப்பின் நினைவேந்தல் உரையை எழுத்தாளரும் பதிப்பாளருமான மல்லியப்புசந்தி திலகர் ஆற்றினார். ''நல்ல மனிதருக்கு நான்கு பேர் இருப்பார்கள் என்பார்கள். தெளிவத்தை ஜோசப் எனும் நல்லவரும் தனக்கு நெருக்கமாக உணர்ந்த நால்வரை பல நேர்காணலில் பதிவு செய்து சென்றுள்ளார். எஸ்.எம்.கார்மேகம், மு.நித்தியானந்தன், துரை. விஸ்வநாதன் ஆகிய மூன்று பெருந்தகைகளுடன் நான்காவதாக சிறியவனான என்னையும் அவர் கருதி கணக்கில் சேர்த்துக் கொண்டமை மகிழ்ச்சியளிக்கிறது. முதல் மூவரினதும் பங்களிப்புடன் பார்க்கும்போது எனது பங்களிப்பு எத்தகையது என்று பார்த்தால் பெரிதாக ஒன்றுமில்லை. விழாத் தலைவர் எம்.வாமதேவனின் இரு நூல்களைப் பதிப்பித்தது போலவே தெளிவத்தையின் இரு நூல்களையும் எமது பாக்யா பதிப்பகம் வெளியிட்டுள்ளது. அதற்கும் அப்பால் அவரது வயோதிபக் காலத்தில் சக்தீ பால அய்யாவை, பேராசிரியர் கா.சிவத்தம்பியை அரவணைத்துப் பார்த்துக்கொண்டது போன்று தெளிவத்தையாரையும் நான் பார்த்துக் கொண்டேன். அவரது வாழ்வின் கடைசி 15 வருடங்கள் அவரது எழுத்துகளை அச்சில் கொண்டு வருவது, அவரது உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணங்களுக்கு உதவுவது என என்னால் இயன்ற உதவிகளை அவருக்கு செய்ததால் அவர் எனக்கு அந்த நான்காவது இடத்தை ஒதுக்கியிருக்கிறார் என நினைக்கிறேன். 'வீரகேசரியின் தோட்ட மஞ்சரி' ஊடாக மலையக எழுத்தாளர்களை ஊக்குவித்த எஸ்.எம்.கார்மேகம் மீது தெளிவத்தையாருக்கு எப்போதும் தனி மதிப்பு இருந்தது.

அவரது முதலாவது சிறுகதை தொகுதியையும் இரண்டாவது தொகுதியை நானும் பதிப்பித்தது போல் இப்போது 'தெளிவத்தை கதைகள்' தமிழ்நாட்டில் செவ்வியல் பதிப்பாகத் தயாராகி வருகிறது.

(தொடர்ச்சி 3 ஆம் பக்கம்...)

## இடர்கால இலக்கியங்கள்

# சாந்தி சச்சிதானந்தன் எழுதிய 'வறுமையின் பிரபுக்கள்'

சர்வோதயத் தொண்டர் கந்தையா திருநாவுக்கரசுவின் பிறந்த தினம் தொடர்பில் பிரபல நூலகர் செல்வராஜா எழுதியது.

ஈழத்தின் பிரபல சமூகவியலாளர் சாந்தி சச்சிதானந்தன் எழுதிய 'வறுமையின் பிரபுக்கள்' (Lords of Poverty) என்ற ஒரு நூலை சில காலங்களுக்கு முன்னர் வாசித்தேன். தனது நூலில் Graham Hancock, அபிவிருத்தி நிறுவனங்களில் பணிபுரிபவர்களை வறுமையின் பிரபுக்கள் என்று குறிப்பிடுகின்றார். வறுமையின் பெயரால் தாம் வாழும் பிரபுத்துவ வாழ்க்கையை குறிப்பிடுவதற்காகவே அவர் அவ்வாறு குறிப்பிடுகின்றார். தாயகத்தில் இன்றுள்ள நிலையும் அவ்வாறுள்ளதையே சாந்தியும் தன் 'வறுமையின் பிரபுக்கள்' என்ற நூலின் வாயிலாக வெளிக்கொண்டுவர முனைந்துள்ளார்.

வட மாகாண சர்வோதய இயக்கம், வறுமையின் பிரபுக்களின் ஆக்கிரமிப்புக்கு உட்படாத - அவர்களின் வாசனையே கண்டிராத ஓர் அமைப்பு என்பது எனது அனுபவபூர்வமான அபிப்பிராயம். காந்தீய வழி நின்று முற்றிலும் சுயநலநோக்கற்று அந்த அமைப்பைக் கட்டியெழுப்பிய சர்வோதய அமைப்பாளர் அமரர் கந்தையா திருநாவுக்கரசுவின் சீரிய வழிநடத்தலில் துளிர்த்து வளர்ந்து இன்று அவரது பெறாமகள் பொ.ஜமுனாதேவியின் தலைமையில் பெருவிருட்சமாகி நிற்கின்றது. இவ்வமைப்பின் தொண்டூழியர்களின் தன்னலமற்ற பணிக்குப் பாதை அமைத்துக் கொடுத்து, அவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியையும் வழங்கிய திருநா அண்ணர் என வழங்கும் அமரர் க.திருநாவுக்கரசுவின் ஆளுமை பற்றிய சில அவதானிப்புகளை இரை மீட்கின்றேன்.

பாடசாலைக் கல்வியை எட்டாம் வகுப்பு வரையே தொடர முடிந்த அவரது வாழ்வை நெறிப்படுத்தியது யாழ்ப்பாணப் பொது நூலகமே என்று அடிக்கடி எனக்குக் கூறிவந்தவர். அவரின் மனதில், நூலகம் - நூலகர் பற்றிய கருத்துநிலை ஒரு பக்தியாகவே உருவெடுத்திருந்தது. அமரர் வே.இ.பாக்கியநாதன் யாழ்ப்பாண நூலகத்தின் நூலகராகப் பதவியேற்றிருந்த அறுபதுகளின் இறுதிப்பகுதிகளில் யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் அன்றாட வாசகராக இவர் இருந்துள்ளார். அங்கிருந்த திராவிடர் கழகத்தின், குறிப்பாக அறிஞர் அண்ணா, பெரியார் ஈ.வெ.ராமசாமி, பாரதிதாசன் போன்றோரின் ஆரம்பகால நூல்கள் அவருடைய அறிவுப்பசிக்குத் தீனியிட்டிருந்தன.

பின்னாளில் மிகச்சிறந்த மேடைப்பேச்சாளராகவும், சிந்தனாவாதியாகவும் வளர்ந்து, அவரை எம்மிடையே ஒரு தலைவனாக வலம் வரச்செய்ததும், யாழ்ப்பாணப் பொதுநூலகம் அவருக்கு ஊட்டிய அறிவே என்றால் அது மிகையாகாது. அதன் காரணமாகவே நூலகங்களின்பால் எப்பொழுதும் அவருக்கு அதீத பக்தி காணப்பட்டது.

நூலகத்தைக் கோயிலாகவும் நூலகரை அந்தணராகவும் கண்டு போற்றும் அவரது பெரும்பண்பை இன்றுவரை வேறு எவரிடமும் நான் காணவில்லை. அவர் கொண்ட அத்தகையதொரு புனிதமான கருத்துருவாக்கமே என்னையும் திருநா அண்ணரையும் இணைக்கக் காரணமாகியிருந்தது.

தமக்காக வாழாது மற்றவர்களுக்காக வாழவேண்டும் என்று போதிப்பதுடன் மாத்திரம் நிறுத்திவிடாமல், தானே அவ்வாறு வாழ்ந்து காட்டியவர் திருநா அண்ணர். வாழ்நாள் முழுவதும் சுவாமி இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் வழியில் நின்று, தன்னை நெறிப்படுத்தி, லௌகீக உலகின் பகட்டான வாழ்வைத் துறந்து, பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர். மக்கள் சேவையே மகேசன் சேவை என்று வாழ்ந்ததுடன் மட்டும் நின்றுவிடாது, தன் தாய், சகோதரிகளையும் உறவுகளையும் இணைத்துத் தன் குடும்பத்தை தான் பிறந்த மண்ணுக்காக சர்வோதய வழியில் காந்தீய சிந்தனையுடன் உழைத்துவாழ வழிகாட்டிச் சென்றவர் அவர்.

தென்னிலங்கையில் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்கள் உறவுகளை, உடைமைகளை இழந்து குடும்பம் குடும்பமாக காங்கேசன்துறையில் கப்பலில் தரையிறக்கப்பட்ட வேளையில் அவர்களுடைய நலன்பேணும் வகையில் ஒரு நலன்புரி சேவை மண்டபத்தை காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரியில் சர்வோதய சிரமதானச் சங்கம் நடத்தியது.

அக்காலகட்டத்தில் தென்னிலங் கையிலிருந்து கப்பல் மூலம் அகதிகளாகத் தரையிறங்கும் எம் மக்களுக்கு உணவுப்பொருட்களை வழங்க சர்வதேச அமைப்பொன்று மொரட்டுவை சர்வோதயத் தலைமையகத்திற்கு ஏராளமான நிதியுதவியை வழங்கியிருந்தது. அதைப் பயன்படுத்தி தென்னிலங்கை யிலிருந்து தேங்காய், மரக்கறி, டின்மீன் மற்றும் பருப்பு வகைகளை யாழ்ப்பாணத்துக்கு நேரில் கப்பலில் அனுப்ப ஆரியரத்னா ஒழுங்கு செய்திருந்தார் - நூலகர் செல்வராஜா எழுதியதன் ஒரு பகுதி இது.

**கணபதி சர்வானந்தா**

# இலக்கிய விருதுக்கான இறுதித் திகதி அறிவிப்பு

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் லண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து இலங்கை மற்றும் அயலகப் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வண்ணம் இரா.உதயணன் இலக்கிய விருது வழங்கி கௌரவிக்கவிருக்கின்றன.

இம்முறை நாவல், சிறுகதை, கவிதை, சிறுவர் இலக்கியம், தமிழ் வளர்ச்சி இலக்கியம், அயலகப் படைப்பாளிகளின் நூல்கள் என விருதுக்காகப் பத்து (10) நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இரா.உதயணன் இலக்கிய விருதுடன், தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 300,000 ரூபா பணப்பரிசும் வழங்கப்படவுள்ளன.

கடந்த காலங்களின் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இம்முறை 2020, 2021, 2022 ஆகிய ஆண்டுகளுக்கான பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

விருதுத் தேர்வுக்காகப் படைப்பாளிகள் தங்களது நூல்களை அனுப்பி வைக்கலாம். அனைத்துப் படைப்புகளும் முதல் பதிப்பாக இருத்தல் வேண்டும். அயலகப் படைப்பாளிகளுக்கான விருதுக்குரிய நூல்கள் தவிர்ந்த ஏனைய துறை சார்ந்த நூல்கள் அனைத்தும் இலங்கையில் வாழும் எழுத்தாளர்களால் எழுதப்பட்டிருக்க வேண்டும். மேலும், இலங்கையில் ISBN பெற்றிருத்தல் வேண்டும்.

அயலகப் படைப்பாளிகளுக்கான விருதுக்குரிய நூல்கள் உலகின் எந்தப் பகுதியிலும் வாழும் எழுத்தாளர்களாலும் எழுதப் பட்டிருக்கலாம். உலகின் எந்தப் பாகத்திலும் பதிப்பித்திருக்கலாம். சிறுகதை, நாவல் ஆகிய இரு துறைசார் நூல்கள் மட்டும் அனுப்ப வேண்டும். அனைத்து நூல்களும் 2019 ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2022 டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பதிப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். தேர்விற்காக மூன்று பிரதிகள் (நூல்கள்) அனுப்பப்பட வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி:-

**இரா.உதயணன் இலக்கிய விருது, இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம், No.9-2/1 Nelson Place, Colombo-06, Sri Lanka. இல 9-2/1 நெல்சன் இடம், கொழும்பு-06, இலங்கை.**

நூல்கள் யாவும் 2023 மார்ச் 31ஆம் திகதிக்கு முன் அனுப்பப்படவேண்டும்.

# தெளிவத்தை ஜோசப்...

தெளிவத்தையாரின் சகோதரன் எழுத்தாளர் பரிபூரணன் இப்போது ஒப்புநோக்குதல் பணியில் ஈடுபட்டு வருகிறார். விரைவில் நூல் வெளிவரும். துரைவியுடன் இணைந்து தெளிவத்தையார் ஆற்றிய பங்களிப்பு காரணமாக இன்றுவரையில் துரை விஸ்வநாதன் எனும் பதிப்பாளரை இலங்கை இலக்கிய பரப்பு நினைவுபடுத்திக் கொண்டே இருக்கிறது. துரைவியுடன் இணைந்து தெளிவத்தை வெளியிட்ட தொகுப்பு சிறுகதை நூல்களுடன், 'மலையக சிறுகதை வரலாறு' எனும் ஆய்வு நூல் மிக முக்கியமானது. அந்நூலுக்காக தெளிவத்தையாருக்கு கலாநிதி பட்டமே வழங்கியிருக்கலாம்.

இரண்டே நாட்களில் இந்தியா போய் கலாநிதிகளாக திரும்பி வருவதையோ வாரத்துக்கு ஒரு தடவை கலாநிதி பட்டம் வழங்கும் விழாக்களையோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வழங்கப்படும் கலாநிதி பட்டங்களையோ நான் சொல்லவில்லை. 60 ஆண்டு காலம் தொடர்ச்சியாக எழுத்துலகில் இயங்கிய தனது ஆய்வு இலக்கியங்கள் ஊடாக புதிய கண்டு பிடிப்புகளை நிறுவிய அவர் பல்கலைக்கழகக் கலாநிதி பட்டத்துக்குத் தகுதியானவர் என்பதே எனது கருத்தாகும்'' என்றார்.

துரைவி நினைவுப்பேருரையை இலங்கைத் திறந்த பல்கலைக் கழக விரிவுரையாளர் கலா சந்திரமோகன் 'சிங்கள மொழிக்கு மலையகத் தமிழரின் பங்களிப்பு' எனும் தலைப்பில் ஆற்றினார். ''முஸ்லிம்கள் மற்றும் இலங்கைத் தமிழ் மக்களோடு ஒப்பிடும்போது அதிகமாக சிங்களம் பேசும் சமூகமாக இருப்பவர்கள் மலையகத் தமிழர்கள். அதனை முறையாகக் கற்று தொழில் வாய்ப்புகளைப் பெற முடியும். ஆனால், சிங்களவர்கள் தமிழ் கற்பதைவிட மலையகத் தமிழர்கள் சிங்களம் கற்பது குறைவானது எனும் குற்றச்சாட்டை பதிவு செய்து அவரது நினைவுப் பேருரை தொகுப்பு நூலில் கட்டுரையாக இடம்பெறும்'' என துரைவி ராஜ் பிரசாத் தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டு சிறந்த ஆய்வு இலக்கியத்துக்காக 'எழுத்தின் இயங்கியல்' நூலுக்காக மயூர ரூபனுக்கும் 'நீ கூறுகிறாய் இறந்துவிட்டாயாம் நீ' எனும் மொழிபெயர்ப்பு நூலுக்காக கவிஞர் இப்னு அஸூமத்துக்கும் (அவருக்கு பதிலாக கவிஞர் வதிரி ரவீந்திரன் பெற்றுக்கொண்டார்) விருதுகள் வழங்கிவைக்கப்பட்டன.

சிறந்த பெண் ஆளுமைக்கான ஜெயம் துரைவி விருது மூத்த ஊடகவியலாளர் அன்னலட்சுமி ராஜதுரைக்கு வழங்கிவைக்கப்பட்டது. விருது பெற்றவர்கள் சார்பில் அன்னலட்சுமி ராஜதுரை ஏற்புரை வழங்கினார். துரைவி ராஜ் பிரசாத் நன்றியுரை வழங்கினார். பார்வையாளர்களின் எண்ணிக்கை குறைவாயினும் கனதியான விழாவாக நிறைவுபெற்றது.

# ஈழத்துத் தமிழர்தம் கலை மரபுகளின்

# முதுசம் பரசுராமன்



ஈழத்தின் மூத்த பறையிசைக் கலைஞரும் உள்ளூர் அறிவு முறைமைகளில் நீண்ட அனுபவங்களும் கொண்ட ஆளுமையுமான கலாபூஷணம் க.பரசுராமன் ஐயா இயற்கையடைந்து விட்டதான செய்தி நம் பண்பாடுகளின் முதுசொம் ஒன்றை இழந்துவிட்ட அங்கலாய்ப்பை எம்முள் ஏற்படுத்தி நிற்கின்றது.

பறையும் பறையிசையும் தமிழர் ப ண்பாட்டின் தொன்மையை எடுத்துக் காட்டும் கலை அடையாளங்கள். ஆனால், நீண்ட வரலாற்றுப் பெருமை பேசும் தமிழரில் கணிசமானோர் பறையையும் பறையிசையையும் அதைப் பயின்று பாதுகாத்து வரும் மனிதர்களையும் கவனத்திற்கொள்ளாத வகையிலேயே வாழ்ந்து வருகின்றார்கள். தமது வரட்டுத்தனமான ஆதிக்க மனோபாவங்களை இக்கலையை மையப்படுத்தி வெளிக்காட்டி வருவதையும் காண்கின்றோம். இங்குதான் தமிழரின் தொன்மை பற்றிக் கூக்குரலிடுவதன் உள்ளார்ந்த அர்த்தம் குறித்துக் கேள்வி எழுப்ப வேண்டியிருக்கிறது.

தமிழர்தம் பண்பாடுகளின் தொன்மையான ஒரு கலை மரபை அதன் உயிர்ப்புக் கெடாமல் பல்வேறு அகப்புறச் சவால்களை, மனத்தாக்கங்களை, அவமானங்களை எல்லாம் எதிர்கொண்டு பாதுகாத்து முன்கொண்டு செல்வதில் கணிசமான உள்ளூர்க் கலைஞர்கள் மிகுந்த உறுதியுடன் செயலாற்றி வருவதைக் காண்கின்றோம். அதாவது பார்ப்பனிய சாதி ஏற்றத்தாழ்வுகள், காலனித்துவத்தின் நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் என்பவை தோற்றுவித்த பல்வேறு சவால்களை எதிர்கொண்டு தமிழரின் தொன்மைமிகு பறையிசைக் கலையைப் பயின்று முன்னெடுப்பதில் மூத்த பறையிசைக் கலைஞர்கள் ஈடுபட்டு வந்துள்ளார்கள். இன்றும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இத்தகைய கருத்துத்தெளிவு கொண்ட கலைஞர்களுள் ஒருவராகவே கலாபூஷணம் க.பரசுராமன் இயங்கி வந்தார்.

மட்டக்களப்பு களுதாவளையைச் சேர்ந்த முதுபெரும் பறையிசைக் கலைஞரான வையன் ஆனைக்குட்டியின் மருமகனான இவர், அவருக்குப் பின்னர் பறையிசைக் கலைக்கேயுரிய வித்துவங்கள் நிறைந்த பெரும் கலை ஆளுமையாக இயங்கி வந்தவர். பறையில் வாசிக்கப்படும் தாளங்களைச் சொற்கட்டுகளில் பாடிக் காட்டிப் பயிற்றுவிக்கும் வித்துவம் நிறைந்தவர். சொர்ணாளி இசைக்கருவியை இசைப்பதில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர்.

தமிழரின் தொன்மைமிகு கலையான பறையிசையானது தமிழ்ப் பண்பாடுகளின் சாபக்கேடாகவுள்ள சாதி ஏற்றத்தாழ்வுகள் காரணமாகவும் காலனித்துவத்தின் நுகர்வுப் பண்பாட்டுருவாக்கத்தின் தாக்கத்தினாலும் வலுவிழந்து மறைந்து போகக்கூடிய ஆபத்தான சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டுப் பின்புலத்தில், அக்கலையின் இருப்பையும் இயக்கத்தையும் மதிப்பிற்கும் மாண்பிற்கும் உரியதாக நிலை நிறுத்தி முன்னெடுக்கும் தூரநோக்குடன், ஆக்கபூர்வமான காரியங்களில் தமிழ்ச் சூழல்களில் தனிநபர்களும் அமைப்புக்களும் கல்வி நிறுவனங்களும் செயலாற்றி வருவதைக் காண முடிகின்றது. இச்செயற்பாடுகள் பறையிசைக் கலையைக் காலங்காலமாகப் பயின்று வரும் கலைஞர்களை மையப்படுத்தியதாக இருந்து வருகின்றன.

இந்த வகையில் 1990களிலிருந்து பறையிசைக் கலை தொடர்பாக மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் பிரதான நபராக க.பரசுராமன் செயலாற்றி வந்துள்ளார். கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை, சுவாமி விபுலானந்த அழகியற்கற்கைகள் நிறுவகம், மூன்றாவது கண் உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாட்டுக்குழு

> தமிழர்தம் பண்பாடுகளின் தொன்மையான ஒரு கலை மரபை அதன் உயிர்ப்பு கெடாமல் பல்வேறு அகப்புறச் சவால்களை, மனத்தாக்கங்களை, அவமானங்களை எல்லாம் எதிர்கொண்டு பாதுகாத்து முன்கொண்டு செல்வதில் கணிசமான உள்ளூர்க் கலைஞர்கள் மிகுந்த உறுதியுடன் செயலாற்றி வருவதைக் காண்கின்றோம்

முதலியவை பறையிசை தொடர்பாக முன்னெடுத்த பல்வேறு காத்திரமான செயற்பாடுகளின் பங்குதாரராக இவர் செயலாற்றியுள்ளார்.

குறிப்பாக கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் பண்பாட்டு இசையணியில் பறையிசையைப் பொருத்தமான விதத்தில் இணைத்துக் கொள்வதற்கும் அதற்கான பயிற்சிகளை இசையணியின் ஆரம்பகால மாணாக்கருக்குப் பயிற்றுவிப்பதிலும் இவர் மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தார். அத்தோடு நுண்கலைத்துறையால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்ட உலக நாடக தின விழா மற்றும் மாமாங்கத் திருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பாரம்பரிய அரங்க விழா என்பவற்றில் ஆரம்ப நிகழ்ச்சியாக பறைமேளக் கூத்தை இடம்பெறச் செய்வதற்கு இவரின் பங்களிப்பு முக்கியமானதாக இருந்துள்ளது.

இதேபோல் சுவாமி விபுலானந்த அழகியற்கற்கைகள் நிறுவகத்தினால் முன்னெடுக்கப்பட்ட பறையிசை தொடர்பான நடவடிக்கைகளிலும் இவரின் பங்களிப்பு இருந்துள்ளது.

இதேபோல் 'மூன்றாவது கண் நண்பர்கள் குழுவினால்' முன்னெடுக்கப்பட்ட உள்ளூர்க் கூத்துகளில் பறையறைவோன் பாத்திரத்தை மீளுருவாக்கம் செய்யும் நடவடிக்கையிலும் மட்டக்களப்பின் மூத்த அண்ணாவிமாருடன் க.பரசுராமன் குறிப்பிடத்தக்க பங்களிப்பு வழங்கினார்.

அதாவது பறையறைவோன் பாத்திரத்தை கௌரவமும் மதிப்பும் மிக்க அரச செய்தி அறிவிப்பாளனாக மீளுருவாக்கும் செயற்பாட்டில் பறையிசை தொடர்பாகவும் அதன் இசை நுட்பங்கள் தொடர்பாகவும் ஆக்கபூர்வமான கருத்துகளைப் பகிர்ந்து கூத்துகளில் பறையறைவோன் பாத்திரத்தை காலத்திற்கேற்ப தகவமைப்பதற்கு காரியமாற்றியிருந்தார்.

தமிழ்ப் பண்பாடுகளில் விளிம்பு நிலைச் சமூகங்கள் மீது ஆதிக்க சமூகங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் மேற்கொண்ட நெருக்குவாரங்கள், இனத்துவ அடையாள அரசியல் ஏற்படுத்திய தாக்கங்கள், நவீன நுகர்வுப் பண்பாடு செலுத்தியுள்ள செல்வாக்குகள் என்பவற்றைத் தனது வாழ்நாளில் நிறையவே அனுபவித்து அதனூடாகப் பயணித்துப் பட்டறிவு பெற்று, தனக்கான, தனது கலை அடையாளத்திற்கான கருத்து நிலையை உருவாக்கிக்கொண்ட ஓர் ஆளுமையாக அவர் விளங்கினார்.

தாதாசாகேப் அம்பேத்கார் சிந்தித்ததைப் போல் அடையாளம், அடையாள நீக்கம், அடையாள மறுப்பு, அடையாள மறைப்பு தொடர்பாகத் தெளிவான கருத்துகளைக் கொண்டிருந்தார். இதற்கு அவருடைய நீண்ட பட்டறிவே காரணம் எனலாம்.

பல்வேறு சவால்கள் நிறைந்த காலகட்டங்களில் அத்தகைய சவால்களையெல்லாம் எதிர்கொண்டு ஒரு பறையிசைக் கலைஞனாக வாழ்ந்த அமரர் க.பரசுராமனின் வாழ்வும் இயக்கமும் தமிழர்தம் கலை மரபுகளில் சவால்களை எதிர்கொண்டு ஆக்கபூர்வமாகப் பணியாற்ற முனைவோருக் கான கற்றலுக்குரிய பல்வேறு விடயங்களை உட்கொண்டதாக இருக்கின்றது.

தமிழரின் தொன்மை மிகு கலை வடிவத்தின் முதுசொம் ஒன்றை இழந்து விட்டோம்.

**து.கௌரீஸ்வரன்**

# யாழில் இடம்பெற்ற மஹாகவியின்
# ‘புதியதொரு வீடு’ நாடகம்



மஹாகவியின் ‘புதியதொரு வீடு’ நாடகத்தைத் திருமறைக் கலா மன்றத்தின் தயாரிப்பில் சில வருடங்களுக்கு முன்பு பார்த்தேன். மீண்டும் அரங்கில் அந்த நாடகத்தைப் பார்க்க முடிந்தது.

யோண்சன் ராஜ்குமாரின் நெறியாள்கையில் உருவான இந்த நாடகம் தொடங்கிய நேரம் முதல் முடிவுவரை பார்வையாளர்களுக்கு சிறந்த ஒரு கலா அனுபவத்தைத் தந்தது என்றால் மிகையாகாது.

மஹாகவியின் பாடல்கள் இந்நாடகத்தில் தேனாக இனித்தன.

நடன இசைக் கலைஞர்கள் சிறந்த அர்ப்பணிப்புடன் ஆற்றுகை அளித்தார்கள். நீண்டதொரு உழைப்பைக் கோருகின்ற கலைஞர்களின் கூட்டுக் கலைத் தயாரிப்பை ஒரு சிறு பத்தியில் எழுதி விட முடியாது.





ஆனாலும், இந்த நாடகத்தில் நடித்த இரண்டு நடிகர்கள் பற்றி இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

ஒருவர் இந்த நாடகத்தில் கண்ணாத்தை பாத்திரம் ஏற்று நடித்த வைதேகி செல்மர் எமில் ஆவார். மஹாகவி, கண்ணாத்தை பாத்திரத்தை எத்தகைய பண்புகளுடன் வடிவமைத்தாரோ, அவை ஒன்றும் மாறாமல் ஒரு கிராமியத் தாயின் முதுமை, நளினம், அவருடைய சமூகத்திற்கு இயல்பான பேச்சு என எல்லா வற்றையும் முழுமையாக உள்வாங்கி வைதேகி, கண்ணாத்தையாக தன்னை முற்றாக மறைத்து அந்த பாத்திரமாகவே வாழ்ந்தார்.

சில நடிகர்கள் வசனம் பேசும்போது மட்டும் நடிப்பார்கள். ஆனால், வைதேகி மேடையில் நிற்கின்ற ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு உடல் அசைவையும் நடிப்பாக வெளிப்படுத்தினார். அவருடைய கண், காது, கை எல்லாம் நடித்துக் கொண்டேயிருந்தன. என்ன ஒரு அற்புதமான உடல் மொழி..! இது எனது கூற்று மட்டுமல்ல, என்னுடன் அந்த நாடகத்தைப் பார்த்த நண்பர்கள் எல்லோருமே வைதேகியின் நடிப்பை மெச்சினார்கள்.

இதேவேளை, சைவ மடத் தலைவராக நடித்த பியூல்ஸ் கொலின் நான் வைத்திய நிலையம் வைத்திருக்கின்ற பாசையூரில் இருப்பவர். இவரை நான் நன்கு அறிவேன். பரம்பரையான கிறிஸ்தவ சமய குடும்பத்தைச் சேர்ந்தவர். இருந்தும் சைவ சமய மடத் தலைவராக இருப்பவர் எப்படி இருக்கவேண்டும் அல்லது எப்படி இருப்பார் என்பதை ஆசாரம், சடங்கு, உடல் மொழி, பேச்சு என எல்லா வற்றையும் முழுமையாக உள்வாங்கி நடித்த பியூல்ஸ் கொலினின் பண்பட்ட நடிப்பு இப்போதும் கண் முன்னே நிற்கிறது. திருமறைக் கலாமன்றத்தின் பல நாடகங்களில் அவரது சிறந்த நடிப்பைக் கண்டிருக்கிறேன்.

இவ்வாறு வைதேகி மற்றும் கொலின் ஆகிய இருவரைப் பற்றியும் சொல்லுகின்றபோது, ‘‘யாழ்ப்பாணத்தின் சிறந்த நாடக நடிகர்கள் வாழ்கின்ற காலத்தில் நான் வாழ்ந்தேன் - நாம் வாழ்கிறோம்’’ என்று எல்லோரும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். மஹாகவியினுடைய வார்த்தையில் சொன்னால் ‘‘நாமும் நமக்கென்றொரு நலியாக் கலையுடையோம்’’ எனலாம்.

இருவரும் கலைப் பயணத்தில் தொடர்ந்து இயங்க வாழ்த்துகள்.

இவர்கள் மட்டுமன்றி, பவித்ரா உட்பட ஏனைய நடிகர்களும் தங்களது பாத்திரத்தை உணர்ந்து நடித்திருந்தார்கள்.

இனிமையான இசை சேர்ந்த இலக்கியத்தன்மை வாய்ந்த ஒரு

சிறந்த பொழுதாக அந்த ஞாயிறு மாலையை ஆக்கிய அனைவருக்கும் பேரன்பு மிக்க நன்றிகள்.

**வேலணையூர் தாஸ்**

# வெண்ணிலா கவிதை மஞ்சரி



மருதமுனை கவிஞர் எஸ்.ஏ.கப்பாரை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் ‘வெண்ணிலா கவிதை மஞ்சரி’யின் எட்டாவது இதழ், இரண்டாவது ஆண்டு நிறைவு இதழாக வெளிவந்திருக்கின்றது. இந்த இதழ் வெளியீட்டு விழா அண்மையில் மருதமுனையில் நடைபெற்றது.

இந்த இதழ் எழுத்தாளர்கள் பலரின் புகைப்படங்களை முன் அட்டையில் தாங்கி வந்திருக்கின்றது. பேராசிரியர் கலாநிதி அமீர் அலி, மறைந்த கவிஞர் அப்துல் காதர் லெப்பை, சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஐ.எம்.முஸாதிக், கவிப்பொய்கை ஜவ்ஸன், எழுத்தாளர் ஏ.எம்.ஹஸ்புள்ளா, கவிஞர் மருதமுனை ஹஸன், இலக்கிய செயற்பாட்டாளர் றியாஸ் குரானா ஆகியோரின் புகைப்படங்கள் முன் அட்டையை அலங்கரித்திருக்கின்றன.

**மீண்டும் உயிர் பெற்ற ‘வெண்ணிலா கவிதை மஞ்சரி’**

பல இலக்கிய சஞ்சிகைகள் வெளிவந்து இடையில் நின்று விடுகின்றன. இந்நிலையில், வெண்ணிலா கவிதை மஞ்சரி எட்டாவது காலாண்டிதழ் - இரண்டாவது ஆண்டு நிறைவு இதழாக வெளிவந்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.




ஒரு சஞ்சிகையை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் தொடர்ச்சியாக வெளியிடுவது என்பது இக்காலகட்டத்தில் மிகச் சிரமமான ஒரு விடயமாகும். இந்நிலையில், ‘வெண்ணிலா கவிதை மஞ்சரி’ தொடர்ச்சியாக வெளிவருவது வரவேற்கத்தக்கது.

1978ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி ‘வெண்ணிலா’ என்ற பெயரில் கலை - இலக்கியச் சஞ்சிகை ஒன்றை ஷகாவியன் என்ற புனைப்பெயரில் எஸ்.ஏ.கப்பார், பாடசாலைக் காலத்தில் தனது நண்பர் சட்டத்தரணி எம்.எம்.எம்.அபுல் கலாத்துடன் இணைந்து அச்சுப்பிரதியாக வெளியிட்டார். அப்போது சிறுகதை, கவிதை, நாடகம், கலைஞர் பேட்டி போன்ற ஆக்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு 12 இதழ்கள் வெளிவந்த நிலையில், தொடரமுடியாமல் நின்றுவிட்டது.

43 வருடங்களின் பின்னர் 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி முதல் மீண்டும் உயிர் பெற்றது ‘வெண்ணிலா’ சஞ்சிகை. ஆம்..! ‘வெண்ணிலா கவிதை மஞ்சரி’ என்ற பெயரில் காலாண்டிதழாக வெளிவந்து எட்டாவது இதழ் - இரண்டாவது ஆண்டு நிறைவு இதழாக இன்று உங்கள் கைகளில் தவழ்கிறது. ஆக ‘வெண்ணிலா’வுக்கு வயது 45.

இவ்விதழில் இலங்கை - இந்திய கவிஞர்களின் முத்தான 33 கவிதைகள் பிரசுரமாகியுள்ளன. ஒவ்வொரு இதழும் ஒரு கவிதைத் தொகுதியாகும்.

‘தடம்பதித்த மூத்த கவிஞர்கள்’ தொடரில் கவிஞர் மருதமுனை ஹஸனின் ‘கொள்ளி சொருகுவதேன்?’ மரபுக் கவிதையை வெளியிட்டு கவிஞரை கௌரவப்படுத்தியுள்ளது ‘வெண்ணிலா கவிதை மஞ்சரி.’

இதில் மிகவும் குறைந்த விலையாக 50 ரூபா பொறிக்கப்பட்டுள்ளது. கவிதை மஞ்சரிக்கு கவிதைகளை அனுப்ப விரும்புகின்ற கவிஞர்கள், எழுத்தாளர்கள் தங்கள் ஆக்கங்களை,

**ஆசிரியர் - கவிஞர் எஸ்.ஏ.கப்பார்,**
**வெண்ணிலா கவிதை மஞ்சரி,**
**378/2, ஸம் ஸம் வீதி,**
**மருதமுனை-03**

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

**கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர்**

# ‘புலர்காலையின் வலி’ நூலின் அறிமுக விழாவில்...










தாயதி வெளியீட்டகத்தால் வெளியிடப்பட்ட இயல்வாணன் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பான ‘புலர்காலையின் வலி’ நூலின் அறிமுக விழா இமையாணன் கலைமகள் முன்பள்ளி மண்டபத்தில் கலாநிதி சு.குணேஸ்வரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

‘‘இயல்வாணன் நீண்ட காலமாக இலக்கியத்துறையில் ஈடுபட்டு வருவதோடு, ஊடகத்துறையிலும் பணியாற்றியுள்ளார். ஊடகத்துறையில் அவருக்குக் கிடைத்த சந்தர்ப்பம் பவிதமான இலக்கிய வெளிப்பாடுகளைக் கொண்டுவர வாய்ப்பாக அமைந்துள்ளது. நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை, விமர்சனம், பத்தி எழுத்து, சிறுவர் இலக்கியம் என விரிந்த தளத்தில் அவர் செயற்பட்டுள்ளார். ‘சுவடுகள்’ என்ற நாவல், ‘அற்றுப் போன அழகு’ என்ற கட்டுரைத்தொகுப்பு என்பன அவரது நூல்களாக வெளிவந்துள்ளன. அவருடைய முக்கிய பங்களிப்பாக நான் கருதுவது சிறுவர் இலக்கியத்தையே. சிறுவர் பாடல்கள், சிறுவர் பத்தி, சிறுவர் நவீனம், பாக்கியம் பாட்டியின் விண்வெளிப் பயணம், செல்லையா தாத்தாவும் செல்லக் குழந்தைகளும் என்பன அவருடைய முக்கிய பங்களிப்புகளாகும். அவருடைய மற்றொரு பரிமாணத்தைச் சொல்லும் இந்தத் தொகுப்பில் உள்ள கதைகள் நாம் கடந்து வந்த யுத்தகால வாழ்க்கையை இன்றைய தலைமுறையினரிடத்தில் உணர்வுத் தொற்றலை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளமை முக்கியமானது’’







என கலாநிதி சு.குணேஸ்வரன் தனது உரையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியல்துறை விரிவுரையாளரும் எழுத்தாளருமான இ.இராஜேஸ் கண்ணன், யாழ். இந்துக் கல்லூரியின் தமிழாசிரியர் கவிஞர் சித்தாந்தன் ஆகியோர் விமர்சன உரைகளை ஆற்றினர்.

எழுத்தாளர் இ.இராஜேஸ்கண்ணன் தனது உரையில்

‘‘இயல்வாணனுடைய கதைகள் அடங்கிய இந்தத் தொகுதி போர்க்கால வாழ்வியலையும் போரின் வடுக்களையும் பேசுகின்ற முக்கியமான தொகுதியாகும். தனது அனுபவ வெளிக்குட்பட்டு அவர் கதைகளைப் படைத்துள்ளமை முக்கியமானது. இன்று ரயில் ஓடுகின்ற தண்டவாளத்தில் அன்று வரிசையாக குடிசைகள் அமைக்கப்பட்டிருந்த வாழ்க்கையை அவரது ‘புகை’ கதை சொல்கிறது. இன்று ரயில் ஓடுவதற்காக அவர்களது குடிசைகள் அருகில் இடமாற்றப்பட்டுள்ளனவே தவிர, அவர்களது பிரச்சினைகள் அப்படியே உள்ளன. போரை ஒரு பார்வையாளனாக இருந்து பார்த்துக் கொண்டிருக்கிற எழுத்தாளனுடைய மக்கள் சிந்தனையாக இந்தக் கதைகளைப் பார்க்க முடியும்’’ என்று குறிப்பிட்டார்.

‘‘இந்தத் தொகுதியிலுள்ள கதைகள் உணர்வின் வழித்தடத்தில் எழுதப்பட்டவை. இந்தக் கதைகளைக் கோவைப்படுத்திப் பார்க்கும்போது ஒரு நாவலுக்குரிய தன்மையைக் காண முடியும். ஆங்காங்கே துண்டு



துண்டாக நடந்த பல சம்பவங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு படுத்தத்தக்கதாக இந்தக் கதைகளில் உள்ளன. கதைகளின் காலம் சமகாலமாக உள்ளது. எனவேதான் இந்தக் கதைகள் ஒரு நாவலுக்குரிய பரிமாணத்தைக் கொண்டுள்ளன. ஒரு காலகட்டத்தின் தேவையை இந்தக் கதைகள் வெளிப்படுத்துகின்றன. கடந்த காலம் பற்றிய வாசிப்பை எமக்குள் நிகழ்த்திய வகையில் இந்தக் கதைகள் முக்கியத்துவம் பெறுகின்றன’’ என கவிஞர் சித்தாந்தன் தனது விமர்சன உரையில் குறிப்பிட்டார்.

நூலின் முதற்பிரதியை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன் வெளியிட்டு வைத்தார். இதனை தென்மராட்சி வலயத்தின் கல்வி நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.காண்டீபன் பெற்றுக் கொண்டார். சிறப்புப் பிரதியை கலாநிதி சு.குணேஸ்வரன் வழங்கிவைக்க, தாமோதரம்பிள்ளை சிவபாக்கியம் பெற்றுக்கொண்டார்.

இந்நூல் அறிமுக விழாவில் எழுத்தாளர்கள், கல்வியியலாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**அருள்**

# திக்குவல்லையில் நூல் வெளியீடு

எம்.ஆர்.எம்.ரிஸ்கி தொகுத்த ‘அறிவுச்சுடர் எம்.ஏ.இனாயத்துள்ளாஹ்’ எனும் நூல் வெளியீடு திக்குவல்லை மின்ஹாத் தேசிய பாடசாலை மஹ்மூத் மண்டபத்தில் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

இவ்விழாவில் தென்மாகாண தமிழ்மொழிப் பாடசாலைகளின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம்.மஷாயிர் ( நளீமி), அல்ஹாஜ் எம்.எச்.எம்.நஸார், திக்குவல்லை கமால் ஆகியோர் உரையாற்றினர்.





சிறப்பு நிகழ்ச்சியாக தமிழ்த் தென்றல் அலி அக்பர் தலைமையிலான கவியரங்கும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கவிமணி நஜ்முல் ஹுஸைன், கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ், ரஸீத் எம்.இம்தியாஸ், இளநெஞ்சன் முர்ஷிதீன் ஆகியோர் பங்கேற்றனர்.

திக்குவல்லை எழுத்தாளர் சங்க (1968) ஸ்தாபகத் தலைவர் - மூத்த கவிஞர் கலாபூஷணம் யோனகபுர ஹம்ஸா கௌரவிக்கப்பட்டார். பாரம்பரியக் கலைகளான களிகம்பு, கலாசார ஆடல் பாடல்கள் என்பனவும் இடம்பெற்றன. திக்குவல்லை ஸும்ரியின் ஏற்புரை முத்தாய்ப்பாக அமைந்தது. அதிபர் எம்.ஏ.எம்.அஸ்வான் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

**(எஃப்.சுல்ஃபிகா)**

# நிறவெறியை எதிர்த்து போராடிய கரீபிய கலைஞன் பொப் மார்லி!



சுருள் சுருளாக இருக்கும் நீண்ட தலைமுடி, வாயில் சப்பிய புகையிலை, மென்மையான இளஞ்சிரிப்பு என இருக்கும் ஜமைக்காவைச் சேர்ந்த அந்த இசைக்கலைஞனின் முகம் சம்பந்தமே இல்லாத பலருக்கும் நெருங்கிய உணர்வை இசையாக உள்ளத்தில் ஏற்படுத்தும்.

காலத்தை வென்ற இசைக் குரலோன் பொப் மார்லி (Bob Marley) மக்களுக்கான விடுதலையை, மானுட அன்பை, இசையின் வழியாக பாடியவர். அந்த இசைக்கலைஞனின் பிறந்த தினம் பெப்ரவரி 6 ஆகும்.

உலகம் முழுவதும் உள்ள இசைப்பிரியர்களுக்கு, குறிப்பாக இன்றைய இளைஞர்களுக்கு மனித நேயத்திற்காக குரல் கொடுத்த இந்த ஜமைக்கா பாடகனைப் பற்றிய அறிமுகம் அதிகம் தேவையில்லை.

வெவ்வேறு இனங்களைச் சேர்ந்தவர்களுக்கு மகனாகப் பிறந்த நெஸ்டா ராபர்ட் மார்லி என்ற இயற்பெயருடைய பொப் மார்லி, இங்கிலாந்தைச் சேர்ந்த நார்வல் சிங்ளேர் மார்லி என்பவருக்கும் ஆபிரிக்காவைச் சேர்ந்த செடெல்லா என்பவருக்கும் பிறந்தவர்.

கலப்பு இனத்தில் பிறந்ததால் 'பொப் மார்லி வைட் போய்' என்று கேலியாக அழைக்கப்பட்டார். இப்படி அழைக்கப்பட்டமை பின்னாளில் தனக்கென ஒரு தத்துவத்தை வளர்த்துக்கொள்ள உதவியது என மார்லி தெரிவித்துள்ளார். ''நான் வெள்ளையின மக்களின் பக்கமோ அல்லது கறுப்பின மக்களின் பக்கமோ இல்லை. நான் கடவுளின் பக்கம் நிற்கிறேன்'' என்பதுதான் அந்த தத்துவம்.

### யார் இந்த பொப் மார்லி?

ஏன் பொப் மார்லியை உலகம் இந்தளவிற்கு கொண்டாடுகிறது? சேகுவேராவுக்கு அடுத்தபடியாக அதிகமான இளைஞர்களின் உடைகளிலும் நெஞ்சிலும் பச்சை குத்தி இடம்பெறும் அளவுக்கு இளைய தலைமுறையை என்றும் கவர்ந்துள்ளார் எனலாம்.

பொப் மார்லியின் பாடல்களில் புதைந்திருக்கும் அரசியல் உணர்வும் விடுதலை வேட்கையுமே அதற்கான காரணங்களாகும். கரீபியன் தீவுகளின் சமூக மற்றும் அரசியல் நிலை தொடர்பான அவரது வெளிப்பாடு சாதாரண தொழிலாளர் வர்க்கத்திலிருந்து பணக்காரர்கள் வரை ரசிகர்களை அதிகம் தேடித்தந்திருந்தது.

ஏன், தற்போதைய காலத்துக்கும் அவரது பாடல் வரிகள் பொருந்திப் போகின்றன. மார்லியின் பாடல்களில் பிரதிபலிக்கும் விடயங்கள் அனைத்தும் அவர் சிறு வயதில் கண்ணுற்ற சாட்சியங்களாகும்.

கறுப்பு – வெள்ளை தம்பதியினருக்கு 1945ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி ஜமைக்காவின் செயின்ட் ஆன் பாரிஷ், நைன் மைல் எனும் இடத்தில் பிறந்த பொப் மார்லி, பின்னாளில் உலகின் தலைசிறந்த பாடகனாக சரித்திரத்தில் இடம்பிடிப்பார் என கனவிலும் அவரது பெற்றோர்கள் நினைக்கவில்லை.

### காதலும் கஞ்சாவும்

1966ஆம் ஆண்டு பெப்ரவரி 10இல் பாடகியான ரீட்டா எண்டர்சனை மார்லி திருமணம் செய்துகொண்டார். ரீட்டா மூலம் ரஸ்தபாரி எனும் சமயம் மார்லிக்கு அறிமுகமானது.

ஜமைக்காவில் அதிகமாக கஞ்சா விளையும். அது ரஸ்தபாரி சமயத்தில் புனிதப்பொருளாக பார்க்கப்பட்டது. மேலும், மூலிகையாகவும் தியான நிலைக்கு உகந்ததாகவும் கருதப்பட்டது. மார்லி அதனைப் பயன்பத்தியதுடன், மாமிசம் உண்பதை தவிர்த்து சைவ உணவுகளை உண்ணத் தொடங்கினார். 1966இல் ஜமைக்கா திரும்பிய மார்லி லிவிங்ஸ்டன், டொஸ் ஆகியோருடன் இணைந்துகொண்டு தனது இசைப் பயணத்தை ஆரம்பித்தார்.

'ஐலண்ட்ஸ் ரெக்கோர்ட்ஸ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் முதல் தடவையாக முழு ஆல்பமொன்றை தனது இசைக்குழுவான 'வெய்லர்ஸ்' மூலம் உருவாக்கினார். 'தீயைப் பிடி' (Catch a Fire) என்ற பெயரிலேயே அந்த ஆல்பம் வெளிவந்தது. பிரித்தானியா, அமெரிக்கா சென்று அவர் இசை நிகழ்ச்சி நடத்த இந்த ஆல்பம் உதவியது.




### உரிமைகளுக்காக எழுந்த பாடல்கள்

''எழுந்து நில்லுங்கள். உங்களது உரிமைகளுக்காக வானத்திலிருந்து கடவுள் வந்து அனைத்து துக்கங்களையும் எடுத்துக்கொண்டு சந்தோஷத்தை வழங்குவாரென்று நீங்கள் அனைவரும் நினைப்பீர்கள். ஆனால், வாழ்க்கையின் பெறுமதியை புரிந்துகொண்டீர்களானால் உங்களது வாழ்க்கையை இந்த பூமியில்தான் தேடுவீர்கள். அப்போது நீங்கள் வெளிச்சத்தைக் காண்பீர்கள். அதனால் எழுந்து நில்லுங்கள்'' எனத் தொடரும் அப்பாடல் மூலம் நினைத்து பார்க்க முடியாத அளவுக்கு உலகம் முழுவதும் உள்ள ரசிகர்களை அவர்களது உரிமைகளுக்காக எழுந்து நிற்கவைக்க மார்லியால் முடிந்தது.

உலகம் முழுவதும் கண்ணீர் சிந்தும் கோடிக்கணக்கான பெண்களுக்காக அவர் இந்த பாடலை இயற்றிப் பாடினார்.

தான் ஒரு கலப்பினத்தைச் சேர்ந்தவன் என தெரிந்திருந்தும் மார்லி தன்னை ஆபிரிக்க வம்சாவளியைச் சேர்ந்த கறுப்பினத்தவன் என்று அறிமுகம் செய்து அடையாளப்படுத்திக்கொள்ள விரும்பினார். வெள்ளையர்களால் அடிமைத்தனமாக கறுப்பினத்தவர்கள் அடிமைப்படுத்தப்படுகின்றமையைக் கண்டதனாலேயே மார்லி இந்த முடிவுக்கு வந்தார். கறுப்பு, வெள்ளை ஆகிய அனைத்து இன மக்களும் மனிதன் என்ற அடிப்படையில் ஒன்று சேர்வதே மார்லியின் கனவாகும்.

### நிறவெறிக்கு எதிராக மார்லி

ஜமைக்காவில் நிறவெறிக்கு எதிராக போராடிய மார்க்ஸ் கிரேவின் அரசியல் செயற்பாடுகளுக்கு மார்லி உதவினார். ஆபிரிக்காவில் மட்டுமன்றி, உலகம் முழுவதும் வாழும் நீக்ரோ மக்களின் வளர்ச்சி குறித்து மட்டுமன்றி ஆபிரிக்க நீக்ரோ மக்களின் சுதந்திர பூமியாக விளங்கவேண்டும் என்ற இலக்குடன் பொப் மார்லி செயற்படத் தொடங்கினார். உலக நாடுகளில் இன்னல்களை அனுபவித்து வரும் நீக்ரோ மக்களின் விடிவிற்காக பாடல் ஒன்றையும் பொப் மார்லி பாடியுள்ளார்.

### மரணப் படுக்கையில் பொப் மார்லி

புற்றுநோயால் இறந்த பொப் மார்லி தன்னுடைய மரணக் கட்டிலில் இருந்தபோது மகனிடம், “பணத்தால் வாழ்க்கையை வாங்க முடியாது” என்றும் “On your way up, take me up. On your way down, don’t let me down.” என்றும் தெரிவித்தார். 1981ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் திகதி பொப் மார்லி தனது 36ஆவது வயதில் அமெரிக்காவின் மியாமி நகரிலுள்ள வைத்தியசாலையொன்றில் மரணமடைந்தார்.

ஜமைக்கா மக்கள் பொப் மார்லியை ஒரு விடுதலைப் போராளியாகவே என்றும் கருதினர். 1981ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி மார்லியின் இறுதிக் கிரியை அரச மரியாதையுடன் நடத்தப்பட்டு அவர் பிறந்த இடமான நைன் மைல் பகுதியில் உடல் புதைக்கப்பட்டது. அத்தோடு, அவரது பிறந்த தினமான பெப்ரவரி 6ஆம் திகதி ஜமைக்காவில் தேசிய விடுமுறை தினமாக அரசால் 1990ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது. ஜமைக்காவின் நைன் மைல் பகுதியில் பொப் மார்லி வாழ்ந்துவந்த வீடு பின்னர் மார்லியின் அருங்காட்சியகமாக மாற்றப்பட்டது.

2018ஆம் ஆண்டு 'ஃபோர்ப்ஸ்' (Forbes) இதழ் வெளியிட்ட தகவலின்படி, அதிக வருமானம் ஈட்டும் இறந்த பிரபலங்களின் பட்டியலில் பொப் மார்லி ஐந்தாவது இடத்தில் இருப்பதாக அறிவித்துள்ளது. கடந்த 20 ஆண்டுகளில் மட்டும் பொப் மார்லியின் ஆல்பங்கள் 75 மில்லியனுக்கும் அதிகமாக விற்றுள்ளமை பொப் மார்லியின் இசைத்திறமைக்கு வரலாற்றுச் சாட்சியாகும்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

# இஸ்லாமியத் தமிழ் இலக்கிய முயற்சிகளில் இயங்கும் பௌஸ்

ஆளுமைகளின் அடையாளம் 2

‘‘இஸ்லாம் எங்கள் வழி. இன்பத்தமிழ் எங்கள் மொழி. இலக்கியம் எங்கள் விழி’’ என்ற மன உறுதியோடு இலக்கியம் படைத்து வரும் முஸ்லிம் இலக்கியவாதிகள், தமிழ்மொழிக்கு புதிய இலக்கிய வடிவங்களைக் கொண்டு வந்து சேர்த்திருக்கின்றனர். கிஸ்ஸா, முனாஜாத்து, மஸ்அலா, படைப்போர், கஸீதா, கஸல், மாலை, தாலாட்டு, நாமா போன்றவை இஸ்லாமிய இலக்கிய வடிவங்களாக தமிழில் மெருகு பெறுகின்றன. அரபு, பாரசீக மொழிகளிலிருந்த சிந்தனைக் கருவூலங்கள், தத்துவங்கள், ஆன்மீக ஞான சித்தாந்தங்கள், கவிதைகள் என்பன மொழிமாற்று இலக்கியமாகத் தமிழை அலங்கரிக்கின்றன.

இலங்கையிலும் தமிழகத்திலும் இவ்வாறு இஸ்லாமியத் தமிழ் இலக்கிய முயற்சிகளில் பங்களிப்பவர்கள் வரிசையில் மார்க்கத்தைக் கற்றறிந்த ஆலிம்களும் மௌலவிகளும் அறிஞர்களும் அங்கம் வகிக்கின்றனர். இவர்களின் இலக்கியத் தேடல்கள் தொடர்கின்றன. ஆய்வு முயற்சிகள் நடைபெறுகின்றன. இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகள் இடம்பெறுகின்றன.

இவ்வகையான கலை, இலக்கிய ஆய்வுத் தேடல்களில் தொடர்ந்து இயங்கிவரும் ஆலீம்கள், மௌலவிகள் வரிசையில் குறிப்பிடத்தக்க ஒருவராக அடையாளப்படுத்தப்படுபவர் மௌலவி காத்தான்குடி பௌஸ் ஆவார் . ஊக்கம் தரும் உரைகள், வானொலி உரையாடல்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், கவியரங்குகள், நாடக மேடைகள், மெல்லிசைப் பாடல்கள், வில்லுப்பாட்டு, ஆய்வரங்குகள் என்பவற்றின் மூலம் கலை, இலக்கிய உலகில் கண்ணியம் பெற்றிருப்பவர் அவர்.

1974இல் ‘நூறுல் பலாஹ்’ ஆண்டு மலரில் எழுதியதன் வாயிலாக எழுத்துலகப் பிரவேசம் பெற்ற அவர், ஐம்பது ஆண்டுகளாக கலை, இலக்கிய உலகில் பிரகாசித்து வருகிறார். நாவன்மை மிக்க ஆலிமாக, சிறந்த கவிஞராக, நாடக ஆசிரியராக மக்கள் மனங்களில் இடம் பிடித்துள்ளவர் அவர். மீலாது விழாக்கள் விசேட நிகழ்ச்சிகளின்போது பிரதம பேச்சாளராக வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் அவரை அழைத்து வருகின்றன.

இலங்கை, இந்தியா, மலேசியா போன்ற நாடுகளில் இடம்பெறும் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகள் படிக்கிறார். கவியரங்குகளில் ஜொலிக்கிறார். பன்னூல் ஆசிரியராகவும் அவர் விளங்குகிறார். ஆய்வு, கவிதைகள், மொழிபெயர்ப்பு என்று அவரின் 22 நூல்கள் தமிழ் இலக்கிய உலகுக்குக் கிடைத்திருக்கின்றன.

மார்க்கத்தின் மனக்கதவு (கட்டுரை - 2006), காதிகோட் (கவிதை - 2006), போதனைப் பொக்கிஷம் (கட்டுரை -2006), முஅத்தினின் முறைப்பாடு (கவிதை - 2006), வைகறை வாசம் (கவிதை - 2006), நிறை மார்க்கத்தின் நிலா முற்றம் (கட்டுரை - 2007), காத்திருந்த கண்கள் (சிறுகதை - 2007), ஊடகத்தில் உதித்த உபதேசங்கள் (கட்டுரை - 2007), விடியலை நோக்கிய விசுவாசிகள் (கட்டுரை - 2007), சின்னச் சின்னப் பூக்கள் (சிறுவர் பாடல்கள்), பாரெங்கும் பலஸ்தீன் (கவிதை - அரபு மொழிபெயர்ப்பு), ரமழானின் அமல்கள் (கட்டுரை - 2009), பேனைக்குள் பெருக்கெடுத்த பெரியவர்கள் (ஆய்வு - 2011), எகிப்து முதல் இலங்கை வரை இஸ்லாமியர்களின் இசைஞானம், (ஆய்வு - 2011 யாழ். இலக்கியப் பேரவையின் சான்றிதழ் பெற்ற நூல்.), அல்குர்ஆன் ஓர் ஆய்வு கூடம் (ஆய்வு - 2012 யாழ். இலக்கியப் பேரவையின் 1ஆவது சிறந்த ஆய்வுநூல் என தேர்ந்தெடுக்கப்பட்டது.), ஈராயிரம் நூல்களை ஆய்ந்த பேராசிரியர் அல்லாமா உவைஸ் (காவியம் - 2014), விடியலுக்கான விலாசங்கள் (போர்காலக் கவிதைகள் - 2014), பன்னீராகும் கண்ணீர் (கட்டுரை - 2014), நபிகள் நாயகமே (கவிதை - 2014) மார்க்கத்தின் மணித்துளிகள் (கட்டுரை - 2014), மாண்புறு ஜூம்ஆவின் மகத்துவங்கள் (தெளிவு விளக்கம் - 2009), பாசம் சென்ற பாதையிலே (கவிதை - பதிப்பித்த நூல்) என்பன இற்றைவரை அவர் தந்த நூல்களாக இலக்கிய உலகில் விரிகின்றன.

அவரின் எகிப்து முதல் இலங்கை வரை இஸ்லாமியர்களின் இசைஞானம், ஈராயிரம் நூல்களை ஆய்ந்த பேராசிரியர் அல்லாமா உவைஸ் போன்ற நூல்கள் இன்றும் ஆய்வாளர்களால் எடுத்தாளப் படுபவையாகத் திகழ்கின்றன.

தொடர் ஆக்கங்களாக எழுச்சி மிகு கட்டுரைகள் மற்றும் கவிதைகளை பத்திரிகைகளில் எழுதி வந்திருப்பவர் காத்தான்குடி பௌஸ். அவற்றில்,

★ தூக்கம் தரும் குத்பாக்கள் ஊக்கம் தரல் வேண்டும்
★ ரமழான் கவிதைகள்
★ முதல் நீரிழிவு ஒரு சீரழிவு
★ கேள்வி - பதில்கள்
★ காதி கோட்
★ பலஸ்தீனக் கவிதைகள்
★ மக்காவின் மார்க்கத் தீர்ப்பு
★ முஅத்தீனின் முறைப்பாடு

என்று தொடர்ந்த எட்டுக்கு மேற்பட்ட ஆக்கங்கள் குறிப்பிடத்தக்கவை. தினகரன், ஜும்ஆ, நவமணி, மித்திரன் போன்ற பத்திரிகைகளில் வெளிவந்து வாசகர்களின் பெரு வரவேற்புப் பெற்ற படைப்புகள் அவை.

1) - மீலாத் விழா உரைகள்
(2000) பாகம் - 1, பாகம் - 2
2) - சுனாமி ஒரு சோதனையா? படிப்பினையா?
(2005)
3) - மீடியாக்களின் போக்கில் சிக்கிய இளைஞர் யுவதிகள் (2013)

என்பன அவரின் உரைகளடங்கிய இறுவட்டுகளாக மிளிர்பவை.





மௌலவி பௌஸ், பாவலர் பண்ணை வெளியீடாக அமைந்த பா (1980) இதழின் பிரதம ஆசிரியராகச் செயற்பட்டு, புதியவர்களின் வருகைக்கு துணை நின்ற பாவளம் மிக்க கவிஞராகப் போற்றப்படுபவர். கலை, இலக்கிய, மார்க்கப் பணிகளை முழுநேரப் பணியாக அர்ப்பணிப்போடு செய்பவர். சமூக, சமய நல்லிணக்கத்திற்காக தனது மார்க்க அறிவையும் கலை, இலக்கிய ஆற்றலையும் சிறப்பாகப் பயன்படுத்திய பேராளராகக் கீர்த்தி பெற்றிருப்பவர். அவரின் சிறப்பான செயற்பாடுகளுக்காகப் பல பட்டங்கள் விருதுகள், பரிசுகள், சான்றிதழ்கள் அவரை நாடி வந்தன.

கலாபூஷணம் விருது (2019), உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் வழங்கப்பட்ட கலைஞர் விருது (2002), தத்துவ வித்தகர் விருது (2003) - பாணந்துறை மறுமலர்ச்சி மன்றம், நாவேந்தர் விருது (2005) - பலப்பிட்டி நலன்புரிச் சங்கம், பத்ருல் மில்லத் (2005) - முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களம், ஆய்வுத்திலகம் (2013) - பாணந்துறை அஹதியா இயக்கம், கவிச்சுடர் (2006) - பாவலர் பண்ணை காத்தான்குடி, இலக்கியஜோதி (2007) - காத்தான்குடி பிரதேச செயலக சாஹித்ய விழா, மார்க்க மணிச்சுடர் (2009) - அகில இலங்கை இளைஞர் மன்றம், ரத்ன தீப விருது (2012) - மலையக கலை கலாசார சங்கம், முஸ்லிம் சமய கலாசார அமைச்சு நடத்திய கவிதைப் போட்டியில் முதல் பரிசு (2005), யாழ். இலக்கியப்பேரவை நடத்திய நூல் தேர்வில் பரிசு (2011 - 2012), இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் சான்றிதழ் (2007) - இஸ்லாமிய இலக்கியக் கழகம், சென்னை, மலேசிய பல்கலைக்கழகம் வழங்கிய, இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வு மாநாட்டுச் சான்றிதழ் (2011), இந்திய காயல்பட்டண 15ஆவது இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் ஆய்வரங்கிலும் கவியரங்கிலும் பங்கு கொண்டமைக்காக வழங்கப்பட்ட சான்றிதழ் (2011) என்பன அவர் பெற்ற விருதுகள், பரிசுகள், சான்றிதழ்களில் சிலவாகும்.

மௌலவி பௌஸ், மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி மண்ணில் உதுமாலெவ்வை - ஹஸீனா உம்மா தம்பதியின் மகனாக 1959இல் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை காத்தான்குடி அல்-ஹிறா வித்தியாலயத்திலும், க.பொ.த. (சா/த) வரை காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றவர். மார்க்கக் கல்வியை காத்தான்குடி ஜாமியதுல் பலாஹ் அரபுக் கல்லூரியிலும், கிழக்கிலங்கை ஷர்க்கியா (அட்டாளைச்சேனை) அரபுக் கல்லூரியிலும் கற்று மௌலவி, அல் ஆலீம் பரீட்சைகளில் சித்தி பெற்றவர். ஐனுல் றிபாயா நூர்தீனை திருமணம் செய்துள்ளார். முஹம்மத் ஸைனி பௌஸ் அவரின் மகனாவார்.

பலப்பிட்டிய ஜும்ஆ பள்ளிவாசலில் 9 வருடங்களும் பாணந்துறை ஹேனமுல்லை அல் - முபாறக் ஜும்ஆ பள்ளிவாசலில் 26 வருடங்களும் பேஷ் இமாமாகவும் மார்க்கப் போதகராகவும் கடமையாற்றி, அப்பிரதேச மக்களின் பேரன்பையும் மதிப்பையும் பெற்றிருக்கும் கலாபூஷணம் பௌஸ், தற்போது பிறந்த மண்ணுக்கு வந்து, அங்கும் தனது மார்க்க, இலக்கியப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்.

இலங்கையில் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய முயற்சிகளிலும் சமூக நல்லிணக்க செயற்பாடுகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருபவர் மௌலவி காத்தான்குடி பௌஸ். அவரது தேகநலனுக்காகப் பிரார்த்தனை செய்வதுடன், அவரது இலக்கிய, சமூக முயற்சிகள் தொடரவும் வெற்றிபெறவும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**பாவேந்தல் பாலமுனை பாறூக்**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7